unit at Hosur, we can save money and also stop the import of potatoes from Simla. So, will the Government come forward to start a cold storage unit in the Hosur taluk?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஏற்கெனவே இப்போது நீலகிரியில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. சென்னையில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம்.

விமான மூலம் பூச்சி மருந்து தெளித்தல்

*** 120 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூச்சி மருந்து தெளிக்கும் விமானப் பிரிவு ஒன்றை நிறுவ தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) & (இ) பூச்சி மருந்து தெளிக்கும் பணிக்காக இரண்டு ஹெலிகாப்டர்கள் வாங்க அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. செலவினங்கள் மற்றும் இதர விவரங்கள் வேளாண்மைத்துறை இயக்குநரால் ஆராயப் பட்டு வருகின்றன.

திரு. எ. சுவாமிதாஸ் : சார், இந்த பூச்சி மருந்து தெளிப்பதற்குத் தற்போது நாம் வாடகை விமானங்களை அமர்த்து கிறோம். ஒரு ஏக்கருக்கு தெளிப்பதற்கு எவ்வளவு வாடகை கொடுக்கிறோம் என்பதை அரசு தெரிவிக்குமா ? அது மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தில் அண்மையில் மருந்து தெளிப்பதற்கு என்று ஹெலிகாப்டர் வரவழைக்கப்பட்டது. அது பழுதாகிவிட்ட காரணத்தால் அதை அங்கே உபயோகப்படுத்த முடியவில்லை. அது பற்றிய விவரம் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அந்த ஹெலிகாப்டர் பழுதாகிவிட்ட காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே மீண்டும் மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : ஒரு ஏக்கருக்கு எவ்வளவு என்றும் கேட்டேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ரூ. 11.30 காசுகள்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹெலிகாப்டர் பழுது அடைந்துபோய் மருந்து தெளிக்கப்படவில்லை. அதே நேரத்தில் விவசாயிகளிடமிருந்து

கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மருந்து தெளிக்காததால் பயிர் சேதம் அடைந்திருக்கிறதோடு, பணமும் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மருந்து தெளிக்கப் படும்.

ஜவ்வாது மலையிலுள்ள வனவிலங்குகள் புகலிடம்

*** 121 வினு—திரு. தொ. ப. சீனிவாசன்** : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவ்வாது மலைத் தொடரில் அம்மர்தி தங்கும் விடுதி அருகில் சிறிய அளவில் உள்ள வன விலங்குகளின் கண்காட்சியை பெரிய அளவில் மிருகக் காட்சி சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் இப்பொழுது தனியார் துறையில் மிருகக் காட்சி சாலை நடைபெறுகிறது. பஸ் போக்குவரத்தும் இருக்கிறது. ஆனல், அந்த சாலை அங்கே சரியாக இல்லாத காரணத்தால், பஸ் போக்கு வரத்தும் நல்ல முறையில் இல்லை. ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தனியாக இதைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லலாம்.

தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலிருந்து முறையீடு

*** 122 வினு—திரு. சு. துரைசாமி** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் திருப்பூரில் இருந்து மின் வாரியத் தலைவருக்கு 1971 ஏப்ரல் மாதத்தில் கோரிக்கைகள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?